சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 03.12.2024
SC.NO.137/2023
PW12 (Lw13 ) : மாலதி (வயது 53 ) த/பெ.செல்லமுத்து
(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

நான் இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன். 2022 ஆம் ஆண்டு இலால்குடி சட்ட ஒழுங்கு காவல் நிலைய ஆய்வாளர் தற்செயல் விடுப்பு சென்ற காரணத்தால், பொறுப்பு காவல் ஆய்வாளராக 15.06.2022, 16.06.2022 ஆகிய இரண்டு நாட்கள் பொறுப்பில் இருந்து வந்தேன். நான் பொறுப்பில் இருந்தபோது, கார்த்திக் கொடுத்த புகாரின் பேரில் எதிரி ஜெகன் மீது கல்லக்குடி காவல் உதவி ஆய்வாளர் செந்தில் குமார் என்பவர் கல்லக்குடி காவல் நிலைய குற்ற எண். 85/2022 ச.பி 294 (பி), 307 இதச வின் படி 16.06.2022 அன்று காலை 8.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வழக்கு கோப்பை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 16.06.2022 காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ இட சாட்சிகள் சேவியர், செல்வராஜ் அவர்களின் முன்னிலையில் மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்து, அவர்களிடம் பார்வை மகஜரில் கையொப்பம் பெற்று, அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.13** மற்றும் பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னிட்டு, முள்ளால் கிராமத்திற்கு சென்று சம்பவ சாட்சிகளான, ஹரிபிரசாத், விவேகானந்தன், ஆகியோரை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட புகார்தாரர் கார்த்திக் என்பவரை சிகிச்சைக்காக இலால்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்து மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்துவிட்டு, முள்ளால் கிராமத்தில் இருந்த யோகராஜ் வீட்டில் வைத்து அவரை விசாரணை செய்து, அவரிடம் வாக்குமூலம் பெற்றேன். அதன் பின்னிட்டு இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சியான வாதியின் சித்தியான வெற்றி செல்வி

என்பவரை விசாரணை செய்து, அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அங்கு விசாரணை முடித்துவிட்டு, சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும், எனக்கு கிடைக்கபெற்ற ரகசிய தகவலின்பேரில் சம்பவம் உண்மையானது என்று தெரிந்து, அங்கிருந்து புறப்பட்டு இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்ட எதிரியான ஜெகன் என்பவரை பல இடங்களில் தேடி கிடைக்காத காரணத்தால் , எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி புள்ளம்பாடி பஸ் நிலையம் அருகில், ஊளவாளி அடையாளம் காட்ட எதிரியை 16.06.2022 அன்று காலை 11.30 மணிக்கு கைதுக்கான காரணம் சொல்லி, எந்த வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இல்லாமல், சரவணன், அசோக் மேத்தா ஆகியோர்களின் முன்னிலையில் எதிரியை கைது செய்து, காலை 11.45 மணிக்கு எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று எதிரி சொல்ல சொல்ல எனது மடிகணிணியில் பதிவு செய்தேன். எனது பென்டிரைவ் மூலம் அருகில் உள்ள இணையதள கடையில் பிரிண்ட் எடுத்து எதிரியிடம் படித்து காண்பித்து, சாட்சிகளான சரவணன், அசோக் மேத்தா முன்னிலையில் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளிடமும், சாட்சி கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் நான் பதிவு செய்தது தான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னிட்டு, எதிரியிடம் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை எங்கு மறைத்து வைத்துள்ளாய் என்று கேட்டதற்கு எதிரியை அவர் கூறும் இடத்திற்கு அழைத்து சென்றால், ஆயுதம் இருக்கும் இடத்தை காட்டுவேன் என்று சொன்னதன் பேரில் முள்ளால் கிராமத்திற்கு சென்று, அவர் வீட்டில் தாழ்வாரத்தில் சொருகப்பட்டிருந்த கத்தியை எதிரியானவர் எடுத்துக்கொடுக்க சாட்சிகளான சரவணன், அசோக் மேத்தா முன்னிலையில் அன்றைய தினம் 13.00 மணிக்கு கைப்பற்றி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கத்தி எதிரியிடம் கைப்பற்றிய கத்தி ஆகும். அது ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக அ.சா.9 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் எதிரியை முள்ளால் கிராமத்திலிருந்து, கல்லக்குடி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று, நிலைய பாரா வசம் ஒப்படைத்து அன்றைய தினமே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

அன்றைய தினமே, வழக்கு சொத்துடன் படிவம் 91 ஐ நிதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் இவ்வழக்கின் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வாதி கார்த்திக்கை அன்றைய தினமே மாலை வேளையில் விசாரணை செய்து, அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதன் பின்னிட்டு, 17.06.2022 அன்று இலால்குடி காவல் நிலைய ஆய்வாளர் பணிக்கு மீண்டும் திரும்பியதால் அவரிடம் வழக்கின் கோப்பினை இவ்வழக்கின் அனைத்து விவரங்களையும் கூறி ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

15.06.2022 முதல் 16.06.2022 வரை நான் இலால்குடி வட்ட காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பில் இருந்தேன். சம்பவம் நடந்த தினத்தன்று முள்ளால் கிராமத்தில் விசேசம் எதுவும் நடந்ததா என்றால் 13.06.2022 முதல் 16.06.2022 வரை காளியம்மன் கோவில் திருவிழா நடந்தது. முள்ளால் கிராமம் கல்லக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்டது. அன்றைய தினம் முள்ளால் கிராமத்திற்கு காவல் அதிகாரிகள் பாதுகாப்பிற்கு சென்றார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் நானும் பாதுகாப்பிற்கு சென்றேனா என்றால், அப்போது நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன். சம்பவம் பற்றி பின்னர் தெரிந்து, சம்பவ இடத்திற்கு சென்றேன். எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால், குறிப்பிட்டு நேரம் சொல்ல இயலவில்லை. 15.06.2022 அன்று இரவு 10.00 மணிக்கு மேல் இருக்கும் என்று நினைக்கிறேன். சம்பவ இடம் சென்று, சம்பவத்தின் உண்மை தன்மை அறிந்து, சம்பவத்தை ஏற்படுத்திய எதிரியை பற்றியும் விசாரணை செய்த, எதிரியினுடைய மறைவிடம் தெரியாததால் தக்க துப்பு வைத்து நிலையம் வந்தேன். சம்பவ இடம் சென்று உண்மை தன்மையை எவ்வாறு அறிந்து கொண்டேன் என்றால், சம்பவ இடத்தில் குழுவாக இருந்த இள வயது பையன்களை விசாரித்து, ஏதேனும் முன் விரோதம் உள்ளதா அல்லது விளையாட்டிற்காக செய்தார்களா என்று விசாரித்து உண்மை தன்மையை தெரிந்து கொண்டேன். டி ஷர்ட் போட்ட பசங்களை அழைத்து விசாரித்தேனா என்றால் , குறிப்பிட்டு அவ்வாறு சொல்ல முடியாது, அங்கிருந்த இளவயது பையன்களையும், விழா குழு தலைவர், மெம்பர், ஊர்காரிய காரர்கள் மற்றும்

முக்கியஸ்தர்களை விசாரித்தேன். மைக்கில் அனைவரையும் அழைத்து வரிசைபடுத்தி விசாரித்தேனா என்றால் அவ்வாறு செய்யவில்லை, அன்றைய தினம் கரண்ட் இல்லை, அதனால் மைக்கை உபயோகிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் சம்பவம் பற்றி 16.06.2022 அன்று காலை 5.00 மணிக்கு தான் தனக்கு தகவல் கிடைத்ததாகவும், பிறகு அரசு மருத்துவமனை சென்று, வாதியிடம் புகார் வாக்குமூலம் பெற்றதாகவும், காலை 8.00 மணியளவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். உதவி காவல் ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு எத்தனை மணிக்கு என்னிடம் ஒப்படைத்தார் என்றால் 8.15 மணிக்கு ஒப்படைத்தார். ஆனால் அது குறித்து காவல் உதவி ஆய்வாளர் அவரது சாட்சிய குறுக்கு விசாரணையில் 8.30 மணிக்கு ஒப்படைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் அது சரியாக கூட இருக்கலாம். நேரம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. அப்போது நான் கல்லக்குடி காவல் நிலையத்தில் இருந்தேன். சம்பவ இடத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 16.06.2022 அன்று காலை 9.00 மணிக்கு சென்றேன். இந்த வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக உறிபிரசாத் அளித்துள்ள சாட்சியத்தில் போலிசார் 15.06.2022 அன்று தன்னையும், பாதிக்கப்பட்ட வாதியையும் சம்பவம் நடந்த அன்றைய தினமே விசாரித்ததாக கூறியுள்ளார் என்றும் அதன்பேரில் அவர்களை நான் அன்றைய தினம் விசாரித்தேனா என்றால் இல்லை. வேறு போலிசார் அவர்களை விசாரித்தார்களா என்பது பற்றி என்னிடம் தகவல் தெரிவித்தார்களா என்றால் இல்லை. நான் எத்தனை மணிக்கு பார்வை மகஜர் தயாரித்தேன் என்றால் 16.06.2022 அன்று காலை 9.00 மணி முதல் 10.00 மணிக்குள் தயாரித்தேன். பார்வை மகஜர் தயாரித்தபோது, என்னுடன் எனது ஓட்டுநரும் , பார்வை மகஜர் சாட்சிகளும் உடன் இருந்தார்கள். பார்வை மகஜரின் சாட்சி செல்வராஜ் ஊர்காவல் படை பணியில் அன்றைய தினம் இருந்தார் என்றால் சரிதான். அவரிடம் பெற்ற வாக்குமூலத்தில் அது பற்றிய விவரத்தை நான் கேட்டு பதிவு செய்யவில்லை என்றால் அவர் ஊர்காவல் படை பணியில் உள்ள விவரம் பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும் என்பதால், அதனை அன்றைய தினம் கேட்டு பதிவு செய்யவில்லை. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாரித்த பின்பு அதனை சாட்சிகளிடம் எடுத்து கூறினேனா என்றால் எடுத்து கூறினேன். நான் கூறுவது தவறு என்றும்,

சாட்சிகளிடம் எந்த விவரத்தையும் கூறவில்லை என்று, மேற்படி சாட்சிகள் அவர்களது நீதிமன்ற சாட்சிய குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார்கள் என்றால் அது சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடம் 16.06.2022 அன்று பகல் 11.45 மணி முதல் 12.30 மணி வரை பதிவு செய்தேன். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது என்னுடன் எனது ஓட்டுநர், கல்விக்குடி கிராம நிர்வாக அலுவலர், முள்ளால் கிராமத்தை சேர்ந்த அசோக் மேத்தா ஆகியோர் உடன் இருந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தை சொல்ல சொல்ல எழுதிவிட்டு பின்பு மடி கணிணியில் பதிவு செய்தேனா என்றால் இல்லை. நான் மடி கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்தேன். பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தை எந்த கடையில் பிரிண்ட் எடுத்தேன் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால், அது தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. ஒப்புதல் வாக்குமூல அனுமதிக்கப்பட்ட பகுதியை சரவணன், அசோக் மேத்தா சாட்சிகளிடம் படித்து காண்பித்தேனா என்றால், சரிதான். மேற்படி சாட்சிகள் அவர்களது நீதிமன்ற சாட்சிய குறுக்கு விசாரைணையில் ஒப்புதல் வாக்குமூல விவரங்கள் பற்றி தங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் தயார் செய்ததில் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் அது சரியல்ல. எதிரியை 16.06.2022 அன்று பகல் 11.45 க்கு எதிரியை கைது செய்தோம். அப்போது சரவணன், அசோக் மேத்தா ஆகிய சாட்சிகள் என்னுடன் இருந்தார்கள். நான் கூறுவது தவறு என்றும், எதிரியை கைது செய்யும்போது உடன் யாரும் இல்லை என்றால் அது சரியல்ல. விஏஓ சரவணன் அவரது சாட்சிய குறுக்கு விசாரணையில் எதிரியை கைது செய்த விவரம் தனக்கு தெரியாது என்றும்,போலிசார் சொல்லி தான் தனக்கு தெரியும் என்றும் நேரடியாக தெரியாது என்றும் கூறியுள்ளார் என்றால் அது சரியல்ல. எதிரியிடம் ஆயுதத்தை 16.06.2022 பகல் 13.00 மணிக்கு கைப்பற்றப்பட்டது. அப்போது சரவணன், அசோக் மேத்தா ஆகிய சாட்சிகள் என்னுடன் இருந்தார்கள். சம்பவம் 15.06.2022 அன்று நடந்ததா அல்லது 16.06.2022 அன்று நடந்ததா என்று என்னிடம் குழப்பம் உள்ளது என்றால் அது சரியல்ல. சம்பவம் பற்றி காவல் நிலையத்தில் 16.06.2022 அன்று தான் தகவல் கிடைத்தது என்றால் சரிதான். ஆனால் நான் சம்பவ இடத்திற்கு 15.06.2022 அன்றைய தினமே சென்றதாக எனது முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யான வழக்கினை பதிவு செய்துள்ளேன்

என்றும், வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

( மறு விசாரணை - இல்லை )

/ signed /
மாலதி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R
MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.12.03 19:01:49 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி